**வரையறுத்த ரக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனி - 2021/2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வரையறுத்த ரக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனியின் ''கம்பனி'' மற்றும் அதன் துணைக் கம்பனிகளை உள்ளடக்கிய தொகுதியின் (''தொகுதி'') 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து கம்பனியின் 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறைமை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளினை முறையாக பேணுதல் வேண்டும

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக தொகுதியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக

காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் சம்பந்தமாக பார்க்கையில் கம்பனியின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவனம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல், தொடர்புபட்ட அறிகையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கீட்டு செயற்பாடுகளைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு செயற்பாடுகளைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் இருக்குமாயின் அவை சம்பந்தமாக முறையாக நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்துதலினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவில் ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியவசியமானதாகும்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது நாட்குறிப்புக்களில் பதியப்படவேண்டிய கொடுக்கல் வாங்கல்களை பொது நாட்குறிப்பில் மற்றும் ஏனைய நாட்குறிப்புக்களில் கொடுக்கல் வாங்கல்களின் தன்மைக்கு இணங்க அடையாளங்கண்டு தனித்தனியாக பதிவுசெய்வதற்கும் அனைத்து நாட்குறிப்புக்களின் விபரிப்பதற்கும் போதியளவில் விபரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வகைப்படுத்தல் தவறுகளையும் கணக்கீட்டுத் தவறுகளையும் சரிசெய்வதற்கு இதனை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. | நாட்குறிப்புக்களுக்கான விளம்பரங்களை சுருக்கக் குறிப்புக்களை விபரமாக காட்டுதல் வேண்டும். |

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 79 (ஆ) பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தற்பொழுதும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 64.99 மில்லியன் கிரயமான பொடி ஆம் மற்றும் பெலெஸ்ரிக் ஹெல்மட், குத்தகை வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் என்பவற்றை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை இந்த நிதி ஆண்டின் போது மீண்டும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தி இருக்காததுடன் 2022/2023 நிதி ஆண்டின் போது மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும். குத்தகை வாகனம் எதுவும் தற்பொழுது இல்லாத போதிலும் குத்தகை காலம் முடிவடைந்ததனால் சுதந்திரமாக வைத்திருத்தலின் கீழ் மூலதனமாக்கப்பட்டுள்ளதுடன் பெறுமதியில் எந்த மாற்றமும் செய்யப்படாததனால் குறிப்பு இலக்கம் 15 இன் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மேட்டு நிலங்கள் செயற்பாட்டுப் பிரிவின் மூலம் பாதுகாப்புச் சேவைகள் வழங்கப்படுகின்ற நிறுவனங்களிடமிருந்து 2021/2022 நிதி ஆண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 2.23 மில்லியன் தொகையானது கடனை அறவீடு செய்யும் பிரிவினால் பேணப்பட்டு வருகின்ற அறிக்கைகளின் பிரகாரம் தீர்த்துவைக்கப்பட்டிருந்தும் அப்பெறுமதியை உரிய கடன்பட்டோர் கணக்குகளுக்கு செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் கடன்பட்டோர் மீதி அப்பெறுமதியால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது. | மூல ஆவணங்களையும் தொடக்க பிரதிகளையும் தேடிக்கண்டு பிடிக்க வேண்டியுள்ளது என தெரியப்படுத்தப்பட்டது. | மீதிகளை சரியாக கணிப்பீடு செய்ய வேண்டியதுடன் மீதிகளுக்கிடையோயன வித்தியாசத்தினை ஒப்பீடு செய்து தேவையான செம்மையாக்கல்களை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வரையறுத்த ரக்னா புரபேட்டி ஹோல்டிங் கம்பனிக்கு சம்பளம், மின்சாரம் மற்றும் நீர்ப் பட்டியல்கள் போன்ற வழக்கமான செயற்பாட்டு செலவுகளை வரையறுத்த ரக்னா பாதுகாப்பு இலங்கை கபனியின் மூலம் கொடுப்பனவு செய்வதற்காக 151 ஆவது பணிப்பாளர், சபைக் கூட்டத்தின் போது அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் துணைக்கம்பனியின் வழக்கமான மாதாந்த செயற்பாட்டு செலவுகளுக்கு எடுத்துக்கொள்ளப்படாத ரூபா 170.93 மில்லியன் செலவுகள் மீளாய்வாண்டின் போது கம்பனியின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அச்செலவுகள் 2022 மார்ச் மாதம் வரை மேற்கொள்ளப்பட்ட செலவானதுடன் 151 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டம் 2023 ஏப்ரல் மாதம் நடைபெற்றது. | முறையான அங்கீகாரத்துடனான செலவுகள் மாத்திரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | 2021/2022 ஆம் ஆண்டு மேட்டு நிலங்கள் பாதுகாப்பு பிரிவில் ரூபா 1,529 மில்லியன் தொகையான வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,529 மில்லியன் தொகையான வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 89.63 மில்லியன் தொகையான செலவு தாள்களின் பெறுமதியில் 2019/2020 மற்றும் 2020/2021 கணக்காண்டுகள் தொடர்பாக வருமானத்திற்கு எதிராக செம்மையாக்கப்பட்ட செலவுத்தாளகளின் பெறுமதி முறையே ரூபா 0.7 மில்லியன் மற்றும் ரூபா 6.46 மில்லியனாக இருந்ததனால் மீளாய்வாண்டில் மேட்டு நில பாதுகாப்பு வருமானம் ரூபா 7.16 மில்லியன் குறைத்தும் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் அடையாளங்காணபபட்ட கணக்காண்டின் போது செம்மையாக்கப்பட வேண்டிய பெறுமதியான ரூபா 1.54 மில்லியன் தொகையான வரவுத் தாள்களை மீளாய்வாண்டிற்கு உரியதான வகையில் செம்மையாக்காமையின் காரணமாக வருமானம் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது. | வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கின்ற இன்வொயிசிற்காக உரிய நிறுவனத்தினால் தீர்த்துவைக்கப்பட வேண்டிய பெறுமதி மாற்றமடையும் சந்தர்ப்பங்களின் போது அதற்காக உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் சரிசெய்வதற்கு கடன் குறிப்பு பத்திரம் வழங்கப்படுவதுடன் பெரும்பாலும் அந்த இன்வொயிஸ்கள் ஒரே மாதத்திற்குரியதல்ல. பின்னைய காலங்களில் கடன் குறிப்பு பத்திரங்கள் உரிய மாதத்திற்கு இணங்க வழங்கப்படுமாகவிருந்தால் பெறுமதி சேர்த்தல் வரி பிரதிபலன்கள் திருத்தம் செய்யப்பட வேண்டியதுடன் பெறுமதி சேர்த்தல் வரிக் கொடுப்பனவுகள்/ மீளச் செலுத்துதல்களுக்கான பல சிக்கல்கள் உருவாகலாம் என்பதனால் இந்த நடைமுறையானது ஒரு தொழில்சார்ந்த நுட்பமாக பின்பற்றப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்கான வருமானங்களை சரியாக அடையாங்கண்டு நிதிக்கூற்றுக்களில் தேவையான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள பிற்போட்ட வரி ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் மற்றும் ஓய்வூதிய பிரதிபலன்கள் மீதான கடப்பாடுகள் ரூபா 172.48 மில்லியனாக இருந்த போதிலும் அது நிதிக்கூறிறுக்களுக்கான குறிப்புக்களுக்கு ரூபா 152.79 மில்லியனாக கொண்டுவரப்பட்டதனால் அக்கணக்குகளுக்குரிய பெறுமதி ரூபா 19.69 மில்லியனால் குறைத்து கணக்கு குறிப்புக்களில் காட்டப்பட்டிருந்தது. | பதிவேடுகளில் வரைபாக்குதல் தவறின் காரணமாக திருத்தம் செய்யப்பட்டதுடன் அதன் மூலம் ஐந்தொகையில் மாற்றம் ஏற்படாததனால் உரிய பதிவுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான சரிசெய்தல்கள் செய்யப்படுதல் வேண்டும். |
| (உ) | உள்நாட்டு நிலையான வைப்புக்கள், சமுத்திர பிரிவின் நிலையான வைப்புக்கள் திறைசேரி உண்டியல்கள் என்பவைகளின் பட்டோலைகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான ரூபா 25.27 மில்லியன் வட்டி வருமானமானது ரூபா 32.74 மில்லியனாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் வட்டி வருமானம் ரூபா 7.47 மில்லினால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏனைய வருமானங்கள் பிழையாக வட்டி வருமானத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளதுடன் அது ஏனைய வருமானங்களின் கீழ் வகைப்படுத்தப்படுதல் வேண்டும். | மீதிகள் சரியாக கணிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் மீதிகளுக்கிடையேயான வித்தியாசத்தினை ஒப்பீடு செய்து தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்படுதல் வேணடும். |
| (ஊ) | ஒருங்கிணைந்த ஒரு தொழில்முயற்சிக்காக பாதுகாப்பு மேற்கொள்ளல் மற்றும் மீன்பிடிப் படகுகளின் பாதுகாப்பிற்காக மாஸல்களை ஈடுபடுத்துவது சம்பந்தமாக வரையறுத்த எவன்காட் மெரிடைம் சேர்விசஸ் (தனியார்) கம்பனியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒன்றிணைந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் உழைத்த செயற்பாட்டு வருமானத்தில் ஒரு மாதத்திற்கு முறையே 05 சதவீதம் மற்றும் 07 சதவீதம் ஆக வரையறுத்த ரத்னா பாதுகாப்பு இலங்கை கம்பனிக்கு செலுத்த வேண்டிய வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஒருங்கிணைநத தொழில் முயற்சிக்கான பாதுகாப்பு செயற்பாட்டு (OBST) பற்றுச்சீட்டுக்கள் (5%) மற்றும் கடற்றொழில் படகுகளை பாதுகாப்பதற்காக சீ மாஸல்களை ஈடுபடுதுவதற்குரிய யெற்பாட்டு பற்றுச்சீட்டுக்கள் (7%) அதன் செயற்பாட்டின் தன்மைக்கு இணங்க காசு அடிபபடையில் பதியப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்கான வருமானங்களை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | வணிக அலுவலக தொகுதியின் கட்டிடங்களை நிர்மாணித்த காணிக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 12.4 மில்லியன் தொகையான பெறுமதி சேர்த்தல் வரியினை மீள அறவீடு செய்யும் இயலுமை இல்லாதிருந்த போதிலும் அப்பெறுமதியானது முற்கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வணிக பெறுவனவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெறுமதி சேர்த்தல் வரியினை மீளச் செலுத்தும் அறிவித்தலினை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்ததனால் மற்றும் நிர்மாணச் செயற்பாடுகளுக்கான வெளியீட்டு வரி பெரும்பாலும் தொடக்கத்திலேயே கிடைக்காததனால் இது கிடைக்க வேண்டியதன் கீழ் பதியப்பட்டுள்ளது. | தேவையான சரிசெய்தல்களினை மேற்கொண்டு கணக்கறிக்கைகளை தயாரித்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| லிடயம் | நிதிக்கூற்றுக்கின் பிரகாரம் பெறுமதி ரூபா மில்லியன் | துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா மில்லியன் | வித்தியாசம் ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| T-56 வகையான மற்றும் LMG வகையான துவக்குகளின் பெறுமதி | 31.90 | 11.62 | 20.28 | 2022/2023 நிதி ஆண்டின் போது தேவையான சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படும். | மீதிகளுக்கிடையேயான வித்தியாசங்களை ஒப்பீடு செய்து தேவைன செம்மையாக்கல்கய் செய்யப்படுதல் வேண்டும். |
| சீருடைகளின் பெறுமதி | 12.93 | 13.33 | 0.4 | 2022/2023 நிதி ஆண்டின் போது தேவையான சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படும். | மீதிகளுக்கிடையேயான வித்தியாசங்களை ஒப்பீடு செய்து தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்படுதல் வேண்டும். |
| தோட்டாக்கள் இருப்பு | 29.12 | 10.55 | 18.57 | 2022/2023 நிதி ஆண்டின் போது தேவையான சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படும். | மீதிகளுக்கிடையேயான வித்தியாசங்களை ஒப்பீடு செய்து தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்படுதல் வேண்டும். |

## 1.6 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 கிடைக்க வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 126.53 மில்லியன் தொகையான ஏனைய பெறவேண்டிய கணக்கு மீதிகளில் ரூபா 36.53 மில்லியன் மீதி செம்மையாக்கல் என்ற பெயரிலான ஒரு கணக்கில் காணப்பட்டதுடன் அது மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான சரிசெய்தல்கள் 2022/2023 ஆம் ஆண்டின் போது முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கலாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செம்மையாக்கல் கணக்கின் மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கம்பனியின் ரூபா 583.81 மில்லியனான வணிக பெறவேண்டிய மீதிகள் மேட்டு நில பிரிவின் ரூபா 6.11 மில்லியன் மற்றும் சமுத்திர பிரிவின் ரூபா 1.20 மில்லியனாக மொத்தமாக ரூபா 7.31 மில்லியன் கடன்பட்டோர் மறை மீதி காணப்பட்டதுடன் அவற்றினை தீர்த்துவைப்பதற்கு தேவையான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது விசேட சேவை வழங்குனரின் மீதியின் வகைப்படுத்தல் சிக்கல் மாத்திரம் ஆனதுடன் வணிக மீதிக்கு தாக்கம் ஏற்பட்டிருக்கவில்லை. வகைப்படுத்தல் பிரச்சினையையும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அடையாளங்காணப்பட்ட மறை மீதியினை திர்த்துவைப்பதற்கு தேவையான செம்மையாக்கல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கம்பனியின் ரூபா 696.16 மில்லியன் தொகையான பெறவேண்டிய கணக்குகளில் 65 கணக்குகள் தொடர்பான 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பெறவேண்டிய ரூபா 79.82 மில்லியன் தொகையும் 47 கணக்குகள் தொடர்பான 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட பெறவேண்டிய ரூபா 18.05 மில்லியன் தொகையும் ஆனதுட்ன கிடைக்க வேண்டிய கணக்குகளின் காலப்பகுப்பாய்வினை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது ஒட்டுமொத்த பெறவேண்டிய கணக்கு மீதிகளில் 05 சதவீதம் அளவானவற்றிற்கு ஐயக் கடனுக்காக ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டு கொள்கைகளில் தற்பொழுது மாற்றம் செய்து அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அது 2024 சனவரி மாத்திலிருந்து அமுல்ப்படுத்தப்படும். | கிடைக்க வேண்டிய கணக்குகளின் காலப்பகுப்பாய்வினை கவனத்திற்கு எடுத்து கடன் மீதிகளை அறவீடு வெசய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வணிக கடன்பட்டோர் மீதியில் 27 கடன்கொடுத்தோர்கள் தொடர்பாக ரூபா 2.51 மில்லியன் மறைமீதி காணப்பட்டதுடன் அவற்றினை தீர்த்துவைப்பதற்கு தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | இம்மீதியானது வகைப்படுத்தல் பிரச்சினை மாத்திரமானதுடன் வணிக கடன்கொடுத்தோரின் ஒட்டு மொத்த மீதிக்கு தாக்கம் ஏற்படவில்லை என்பதனால் வகைப்படுத்தல் பிரச்சினையை சரிசெய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய மறை மீதியை தீர்த்துவைப்பதற்கு தேவையான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்த்தல் வரி அதிகாரச்சட்டத்தின் 26 (1) ஆம் பிரிவு | ஏதாவது வரி அறவிடக்கூடிய காலப்பகுதி தொடர்பான வரியானது அந்த வரியினை அறவிடக்கூடிய காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் வருகின்ற மாதத்தின் இறுதித் திகதியின் பின்னரான திகதி இல்லாத ஒரு திகதியில் செலுத்துதல் வேண்டும். எனினும் இந்த அறிக்கைத் திகதி வரை ரூபா 79.11 மில்லியன் செலுத்த வேண்டி இருந்தது. | 2022 யூன் மாதம் வரையான முழுப் பொறுப்பு (மேன்முறையீடு மற்றும் எதிர்ப்புக்களுக்கு உட்பட்டு) ரூபா 101,612,346 ஆக இருந்ததுடன் கொடுப்பனவு செய்தல் திட்டத்திற்கு இணங்க தீர்த்துவைத்தல்கள் (2024 சனவரியிலிருந்து ஏப்ரல் வரை) ரூபா 22,500,000 என்பதனால் 2024 ஏப்ரல் 30 ஆந் திகதியில் உள்ளவாறு நிர்ணயிக்கப்பட்ட மீதி ரூபா 79,112,346 ஆகும். | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டிக் கோவை** | | | |
| | (i) 2.7, 2.8 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் மற்றும் 2011 சனவரி 01 ஆந் திகதி வழங்கிய இலங்கை சனநாயக சோசலிகச் குடியரசின் பெறுகை கையேட்டிற்காக 20 ஆவது பிற்சேர்க்கை | நிர்மாண மதிப்பீட்டுப் பெறுமதி 3,192.47 மில்லியன் தொகையான கம்பனியின் தலைமை அலுவலக கட்டிடத்தினை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காக வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைக்குழு மற்றும் மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 20 ஆம் பிற்சேர்க்கையின பிரகாரம் ரூபா 150 மில்லியனுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்காக | 2015 ஆம் ஆண்டில் இடைநடுவில் நிறுத்தப்பட்ட இச்செயற்திட்டம் 2020 ஆம் ஆண்டில் கலப்பு அபிவிருத்தி வணிக அலுவலகத் தொகுதி செயற்திட்டமாக திருத்தி மீண்டும் நிர்மாண நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனை சேவைகளுக்காக ஒப்பந்த கம்பனிக்கும் ஆலோசனை கம்பனிக்கும் ஒப்படைப்பதற்காக அப்போதிருந்த தலைவர் உள்ளடங்கலாக முகாமைத்தும் ஒரு பெறுகை குழுவினையும் ஒரு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினையும் | பெறுகை வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படாமை தொடர்பாக முகாமைத்துவம் பொறுப்பு கூறுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழுவின் மூலம் ஒப்பந்தக்காரரினை தெரிவு செய்வதற்காக பெறுகை நடைமுறை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மேற்கூறிய கட்டிட நிர்மாணங்களுக்காக ஒப்பந்த கம்பனியை தெரிவு செய்யும் போது அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. போட்டி விலை மனுதாரர்களில் சபையின் ஒரு தலைப்பட்சமான தீர்மானத்தின் அடிப்படையில் நிர்மாண ஒப்பந்த கம்பனி தெரிவுசெய்யப்படடிருந்தது. | நியமித்திருந்ததுடன் முன்னாள் தலைவர்/ பிரதானி உள்ளடங்கலாக முகாமைத்துவம் தமது தற்றுணிபின் பேரில் நடவடிக்கை எடுத்துள்ளது. | |
| (ii) | 2007 நவம்பர் மாதம் வழங்கிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஆலோசனை சேவை பெறுகை வழிகாட்டிக் கைடேட்டின் 2.10.1 ஆம் பிரிவு மற்றும் 3 ஆம் அத்தியாயம் | ரூபா 100 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதிக்கு ஒரு ஆலோசனை கம்பனியை தெரிவு செய்யும் போது அமைச்சரவை நியமித்த ஒரு பெறுகைக்குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ரக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனியின் தலைமை அலுவலக கட்டிடத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 182.43 மில்லியன் பெறுமதிக்கு ஆலோசனை கம்பனியை தெரிவுசெய்யும் போது மேற்கூறிய ஏற்பாடுகளின் பிரகாரம் | பெறுகை வழிகாட்டிக் கையேட்டின் 2.10.1 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததுடன் ஆலோசனை கம்பனிக்கு ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்கள் எதுவும் தற்பொழுது கம்பனியிடம் இல்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையினைப் பின்பற்றாமை தொடர்பாக முகாமைத்துவம் பொறுப்பு கூறுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்காது கம்பனியால் ஆலோசனைக் கம்பனி தெரிவுசெய்யப்பட்ட து. | | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 395(இ) | ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் உள்ள கொடுக்கல் வாங்கல் நிலைமை தொடர்பாக அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கி கணக்கிணக்க கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் பேணப்படுகின்ற 05 வங்கி கணக்குகளுக்காக 2023 செப்தெம்பர் மாதம் வரை 05 மாதங்களுக்கும் 16 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலவீச்சில் வங்கி கணக்கிணக்க கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவி ல்லை. | இந்த அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்படுவதுடன் 2023 செப்தெம்பர் மாதம் வரை இந்த அனைத்து வங்கி கணக்கிக்க கூற்றுக்களும் 2023-11-10 ஆந் திகதி பாதுகாப்பு அமைச்சிற்கும் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| | (i) 01/2021 ஆம் இரல்க 2021 நவம்பர 16 ஆந் தகிதிய அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் அது தொடர்பான செயற்பாட்டுக் கையேட்டின் | | | |
| | 3.4(i) ஆம் பிரிவு | 2022 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனியிடம் ஆட்சேர்ப்பு நடைமுறை இல்லாதிருந்த போதிலும் ஒவ்வொரு பதவிகளுக்குமுரிய ஊழியர் எண்ணிக்கை, சம்பள அளவுத்திட்டம், கணக்குப் பிரிவில் உரிய பதவிகளுக்கான தொழில் விபரங்கள், | 152 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது கம்பனியின் ஒவ்வொரு பதவிக்குமான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் (SOR) எங்கள் நிறுவனத்தின் வியாபார நடைமுறைகளுக்கு நிகரான வகையில் மேற்கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்டது. மேலும் | சுற்றறிக்கையின் பிரகாரம் தேவையான திருத்தங்கள்களை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நியமனத்தின் தன்மை, வயது எல்லை சேர்த்துக்கொண்ட முறைமை (வெளிவாரியாக மற்றும் உள்ளகரீதியாக தெரியப்படுத்துதல்/ எழுத்துமூலம் மதிப்பீடு செய்தல்/ நேர்முகப் பரீட்சை முதலியவாறாக) 2023 மே 30 ஆந் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையினுள் உள்ளடங்கியிருக்கவில்லை. | ஒவ்வொரு பதவிக்குமுரிய தொழில் விபரமானது வியாபார தேவைப்பாட்டிற்கு இணங்க பதவிக்குப் பதவி மாற்றமடையும் வகையில் தயாரித்து ஆளணியில் உள்ள அனைத்து நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. | |
| 6.6 ஆம் பிரிவு | கம்பனியால் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களையும் வரைபு ஆண்டறிக்கையினையும. கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2021/2022 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 01 ஆண்டு 06 மாதங்கள் தாமதத்துடன் 2023 திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்கான வரைபு ஆண்டறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018/2019, 2019/2020 மற்றும் 2020/2021 ஆகிய நிதி ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்களை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அதன் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய பின்னைய அனைத்து செயற்பாடுகளும் தாமதமடைவதனைக் தவிர்ப்பதற்கு முடியாமையின் அடிப்படையில் 2021/2022 நிதிக்கூற்றுக்களையும் எதிர்பார்த்த திகதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது. இந்நிலைமையை 2024/2025 நிதி ஆண்டின் போது தவிர்த்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுதக்கப்படும். | சட்ட விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க நிர்மணயிக்கப்பட்ட திகதிகளில் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 02/2022 ஆம் இலக்க 2022 சனவரி 18 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| | 02 மற்றும் 06 ஆம் பிரிவுகள் | 2022 மார்ச் மாதத்திலிருந்து தெரிவுப் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுகின்ற முகாமைத்துவ மட்டத்திலுள்ள 20 உத்தியோகத்தர்களுக்கு கோபரேட் தொலைபேசி பகேஜ் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 102,000 தொகையான தொலைபேசிப் பட்டியல் கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தும் அந்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 117,000 தொகையான தொலை பேசி படிகள் சுற்றறிக்கை வரம்புகளைப் பெருட்படுத்தாது சம்பளத்துடன் சேர்த்து செலுத்தப்பட்டிருந்தது. | கம்பனியின் வியாபாரத்தின் தன்மையின் அடிப்படையில் தொலைத்தொடர்பு வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் தற்பொழுது ZOOM தொழில்நுட்பம் போன்ற நவீன நடைமுறைகளினூடாக தொலைத்தொடர்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால் கோப்பரேட் பெக்கேஜ் மாத்திரம் போதியதல்லாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. கடமைத் தேவைப்பாட்டிற்காக கம்பனியால் எந்த கொடுப்பனவும் இன்றி தமது பங்களிப்பினை வழங்குமாறு உத்தியோகத்தர்களிடம் வேண்டிக் கொள்ளுதல் பொறுப்புக்கூற வேண்டிய ஒரு கம்பனியாக நியாயமற்றது என்பதனால் இக்கொடுப்பனவுகள் நிறுவனத்தினால் மோற்கொள்ளப்படுகின்ற ஒரு முதலீடு என மேலும் தெரிவிக்கிறேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 06/2022 ஆம் இலக்க 2022 ஒக்தோபர் 06 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 1 மற்றும் IV ஆம் பிரிவுகள் | எந்தவொரு உத்தியோகத்தினதும் கண்டிப்பாக ஓய்வுபெறும் வயது 60 ஆனதுடன் அச்சுற்றறிக்கையின் IV ஆம் பிரிவின் பிரகாரம் 60 வயதினை மிகைத்து தற்பொழுது சேவையில் ஈடுபடுகின்ற மற்றும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு | கம்பனியின் வியாபார தேவைப்பாட்டின் அடிப்படையில் 65 வயது வரை ஒப்பந்த அடிப்படையில் வருடாந்தம் சேவையை நீடிப்புச் செய்தல் கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட்டது. அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| முன்னர் 60 வயதினை பூர்த்திசெய்கின்ற அரசாங்கத்தின் தொழில் முயற்சிகளிலுள்ள ஊழியரகள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கண்டிப்பாக ஓய்வுபெற வேண்டிய போதிலும் 60 வயதினை மிகைத்து ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ள 10 நபர்கள் 2022 மார்ச் 31 ஆந் திகதியில் சேவையில் ஈடுபட்டிருந்தனர். | பணிப்பாளர நாயகத்துடன் 2024-01-30 ஆந் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின் போது வாய்மொழி மூலம் இணக்கப்பாட்டிற்கு வந்து கொள்ளப்பட்டிருந்ததுடன் இது சம்பந்தமாக எழுத்துமூல வேண்டுதல்களை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. அந்த எழுத்து மூல வேண்டுதல்களுக்கான பதில் இன்று வழரை கிடைத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விவைுகள் ரூபா 204,005,998 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 132,062,915 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 71,943,083 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு வருமானங்களின் உள்நாட்டு பிரிவு ரூபா 369,553,958 ஆல் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டில் நிறைவேற்று ஆளணியினரின் சம்பளச் செலவுகள் முறையே ரூபா 108,972,586 மற்றும் ரூபா 143,543,877 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அச்செலவு 32 சதவீத்தினால் அதிகரித்திருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டில் நிதிக்கிரயம் முறையே ரூபா 24,608,998 மற்றும் ரூபா 94,058,649 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அச்செலவு 282 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மேலும் முன்னைய ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டில் பிரயாணச் செலவுகள் மற்றும் போக்குவரத்துச் செலவுகள் முறையே ரூபா 1,739,636 மற்றும் ரூபா 5,319,107 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அச்செலவு 206 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் முறையே 3.12 மற்றும் 3.23 ஆக இருந்ததுடன் விரைவுச் சொத்துக்கள் விகிதம் முறையே 3.12 3.23 ஆக இருந்தது. கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்வது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நலன்புரிச் சங்கத்தினால் பேணப்படுகின்ற விற்பனை நிலையத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட ஆளணியினருக்கு 2022 பெப்ரவரி மாதத்திலிருந்து யூலை மாதம் வரை ரூபா 4.57 மில்லியன் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. அக்காலப் பகுதியில் விற்பனை நிலையத்தின் தேறிய நட்டம் ரூபா 8.72 மில்லியனாக இருந்ததனால் மற்றும் விற்பனை நிலையம் தொடர்ச்சியாக நட்டம் அடைந்திருந்ததன் அடிப்படையில் 2022 செப்தெம்பர் மாதம் மூடப்படாதிருந்ததுடன் நலன்புரிச் சங்கத்திற்கு கம்பனி வழங்கியிருந்த வட்டியில்லாத கடன் தொகையில் இன்னும் ரூபா 1.28 மில்லியன் அறவீடு செய்ய வேண்டியிருந்தது. | விற்பனை நிலையத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு அறிக்கையினைத் தயாரிக்காது அப்போது இருந்த தலைவர் உள்ளடங்கலாக முகாமைத்துவம் இந்த விற்பனை நிலையத்தை ஆரம்பித்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் 2022 சனவரியிலிருந்து 2022 செப்தெம்பர் வரையான காலப்பகுதியில் நலன்புரிச் சங்கத்தின் Hello Fresh கணக்கில் ரூபா 8,716,861 தேறிய நட்டம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2022-08-11 ஆந் திகதி தற்போதைய தலைவர்/ பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக கடமையை பொறுப்பேற்றதன் பின்னர் இந்த நலன்புரி விற்பனை நிலையத்தின் கணக்கில் நடவடிக்கைகள் தொடர்பாக பிரச்சினையான நிலைமை அவதானிக்கப்பட்டதனால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு தெரியப்படுத்தி பாதுகாப்பு அமைச்சு மட்டத்தில் மேற்கொண்ட கணக்காய்வின் பிரகாரம் அக்காலப்பகுதியில் ரூபா 12.2 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. எனவும் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 06 மாதங்களுக்குள் ஒரு மாதத்திற்கு ரூபா 02 மில்லியன் அளவான நட்டம் காணப்பட்டது என சுட்டிக்காட்டி இந்த விற்பனை நிலையத்திலிருந்து எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்கவில்லை என மேற்கூறிய அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.அதற்கிணங்க 2022 செப்தெம்பர் மாதம் விற்பனை நிலையத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. நலன்புரி மற்றும் மரண உதவி சங்கங்களுக்கு கம்பனியின் ஆளணியினர் தாமாகவே அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொண்டதுடன் அச்சங்கங்களின் நிருவாக, நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதன் பொறுப்பு முறையாக கம்பனியிடம் இல்லாததுடன் அங்சங்கத்தினால் அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படும் | கடன் மீதியினை அறவீடு செயவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உள்நாட்டு கப்பல்துறை முகவர் நிறுவனங்களுக்கு 2011 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட வைத்திருக்கப்படும் இடங்கள் நிர்ணயிக்கப்படாத 13 துவக்க்குகள் மற்றும் வெளிநாட்டு 08 துவக்கு களஞ்சியங்களில் வைக்கப்பட்டுள்ள 139 துவக்குகளை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு அல்லது அவற்றினை பெற்றுக்கொள்ளும் போது கிரயம் வினைத்திறனற்றதாயின் ஏனைய மாற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கம்பனியால் உள்நாட்டு கப்பல்துறை முகவர் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட 67 துவக்குகள், 307 துணைக் கருவிகள் மற்றும் 5008 தோட்டாக்கள் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சமுத்திர பாதுகாப்பு கம்பனியால் கடலில் அழிக்கப்பட்டதுடன் கடலில் அழித்தல் தொடர்பான நடைமுறைகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு மற்றும் அதற்டகாக பாதகாப்பு அமைச்சின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதனை உள்ளடக்கி ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள் அடையாளங்காணப்பட்டிரக்கவில்லை.<br>கடலில் அழிக்கப்பட்ட போன 67 துவக்குகளில் 56 துவக்குகள் தொடர்பாக ரூபா 8.81 மில்லியன் நட்டத்தில் ரூபா 528,000 தொகையினை அறவீடு செய்வதற்கும் மிகுதியான 11 துவக்குகள் தொடர்பான நட்டத்தை அறவீடு செய்தலும் அந்த துவக்குகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தலும் இந்த அறிக்கைத் திகதி வரை இடம்பெற்றிருக்கவில்லை. | வழங்கப்பட்ட 139 துவக்குகள் மற்றும் வைக்கப்பட்டுள்ள இடங்கள் தொடர்பான தகவல்கள் இல்லாது 13 துவக்குகள் சம்பந்தமாக எங்கள் கம்பனியால் அடிக்கடி உரிய கப்பல்துறை நிறுவனத்திற்கு தெரியப்படுத்தி அந்த துவக்குகளை கம்பனி பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக நல்ல பதில் கிடைக்காததுடன் இது சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளரின் தலைமைத்துத்தில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அந்த துவக்குகளையும் உபகரணங்களையும் கொண்டு வருவதற்கு அல்லது அதற்காக அதிக செலவு செய்ய வேண்டி ஏற்படுமாயின் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைக்கு இணங்க அழித்து உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்ரிச்சியாக மேற்கொள்ளப்படும்.<br>67 துவக்குகளையும் உபகரணங்களையும் கப்பலுக்கு விடுவித்ததன் பின்னர் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அக்கப்பல்களின் தளபதிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் கடலில் அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடலில் அழிக்கப்பட்டுள்ள 67 துவக்குகள் சம்பந்தமாக மீண்டும் 2023/12/06 ஆந் திகதிய RALL/MD/ARMOURY/08/2023 (553) ஆம் இலக்க கடித்தின் மூலம் பாதுகாப்பு அமைச்சிற்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடலில் அழிக்கப்பட்டுள்ள இந்த 67 துவக்குகளுக்கு மத்தியில் 56 துவக்குகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு எங்கள் கணக்குப் பிரிவிற்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டது. மிகுதியான 11 துவக்குகள் சம்பந்தமாக உரிய கப்பல் கம்பனியால் போதியளவான எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்காததனால் அக்கம்பனிகளிடமிருந்து துவக்குகளை கடலில் அழிக்கப்பட்டமை தொடர்பான போதியளவான சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு எங்கள் கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | துவக்குளை மீள பெற்றுக்கொள்வதற்கு அல்லது ஏனய மாற்று நடவடிக்கைக் எடுக்கப்பட வேண்டியதுடன் நட்டத்தை அறவீடு செய்வதற்கும் நிதிப்பிரமாணத்தின் பிரகலரமை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஒரு தொலைபேசிக் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அலகு விலை ரூபா 307,500 பெறுமதியான Apple iphone 13128 GB Midnight வகையான 05 நடமாடும் தொலைபேசிகளில் ஒரு நடமாடும் தொலை பேசியினைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் கம்பனியிலிருந்து நீங்கியிருந்த போதிலும் கம்பனிக்கு திருப்பி ஒப்படைக்கப்படாதிருந்தும் அது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் கம்பனியால் இன்று வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத்தொலை பேசி Mobitel (Private) Limited கம்பனியால் FOC (Free of Charge) அடிப்படையின் கீழ் அப்போதிருந்த பணிப்பாளர் - நிறுவன தொடர்புகள், மனித வளங்கள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆக செற்பட்ட லெப்டினன் கேர்னல் ஏ- ரீ பானகொட (ஓய்வுபெற்ற) அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் இது சம்பந்தமாக ஏ.ரீ பானகொட (ஓய்வுபெற்ற) அவர்களிடம் விசாரிக்கையில் 04 தொலைபேசிகளை வழங்கிய உத்தியோகத்தர்களின் பெயர்களை எங்களுக்கு தெரியப்படுத்தியிருந்த போதிலும் எங்களுக்கு தொலைபேசியிகளை ஒப்படைத்த நபர்கள் யார் என்பது ஞாபகமில்லை என குறிப்பிடப்பட்டது. எவ்வாறாயினும் இந்த தொலைபேசிகள் சம்பந்தமாக கம்பனி எந்த வகையிலும் பணத்தை செலுத்தியிருக்கவில்லை. | சொத்துக்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | ரக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனியின் குறிக்கோள்கள் மற்றும் செயற்பணிகளின் கீழ் கொண்டுவரப்படாத சேதனப் பசளை தயாரிப்பு நடவடிக்கைகளுக்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது ரக்னா புரஜெக்ட் மனேஜ்மன்ட் (RPML) கம்பனி 2021 யூன் 21 ஆந் திகதி தோற்றுவிக்கப்பட்டிருந்தது.<br>இக்கம்பனியை தோற்றுவிக்கும் தேவைப்பாடு காணப்பட்டதா என்பது தொடர்பாக சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் 2021 ஒக்தோபர் மாதம் தெரியப்படுத்தியிருந்தும் சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளாதும் திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாதும் இந்த துணைக் கம்பனி தோற்றுவிக்கப்பட்டிருந்தது. | வரையறுத்த ரக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனி புதிய செயற்திட்டத்தினை அமுல்படுத்தும் குறிக்கோளில் ரக்னா புரஜெக்ட் மனேஜ்மன்ட் லிமிடட் (RPML) என்ற பெயரில் உப கம்பனியை தோற்றுவிப்பதற்கு பின்வரும் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு அப்போதிருந்த முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்துள்ளது என பேணப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்டது. 2021-05-27 ஆந் திகதிய RALL/SEC/LEGAL/MOD/2021(16) ஆம் இலக்க கடிதம் பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டு புதிய உப கம்பனியை தோற்றுவிப்பதற்காக அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட கடிதத்திற்கு ஆலோசனை வழங்கி 2021-06-01 ஆந் திகதிய SMONS/NS/RALL/ SUBSIDIARY/2021(01) ஆம் இலக்க அரசாங்க பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் கடிததத்தின் மூலம் இது சம்பந்தமாக அமைச்சரவை பத்திரத்தினை வரைபாக்கி அமைச்சிற்கு அனுப்பிவைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது.<br>மேற்குறிப்பிட்ட கடிதத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க 2021-06-09 ஆந் திகதிய RALL/SEC/LEGAL/MOD/2021(18) ஆம் | 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அமைச்சு செயலாளரின் சிபாரிசு அமுல்படுத்தப்படாமை சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இலக்கத்தின் மூலம் உரிய அமைச்சரவை பத்திரத்தினை வரைப்பாக்கி பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.
2021-06-11 ஆந் திகதிய RALL/SEC/LEGAL/MOD/2021(20) ஆம் இலக்க கடித்தின் மூலம் RPML கம்பனியின் பணிப்பாளர் சபையாக அங்கத்தவர்களை பிரேரித்து அங்கீகாரத்திற்காக பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபைக்கு பிரேரிக்கப்பட்டுள்ள அங்கத்தவர்களுக்கு 2021-06-15 ஆந் திகதிய MOD/SD/MA/2021(86) ஆம் இலக்க பாதுகாப்பு அமைச்சின் கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. வரையறுத்த ரக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனியின் 14/2021 ஆம் இலக்க பணிப்பாளர் சபை சம்மதத்தின் கீழ் இப்புதிய உப கம்பனியை தோற்றுவிப்பதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. RPML கம்பனி 2021-06-21 ஆந் திகதிய 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது.
2021-07-30 ஆந் திகதிய 137 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்காக 137(04) ஆம் இலக்க சபைப் பத்திரத்தினைச் சமர்ப்பித்து 2021-06-15 ஆந் திகதிய MOD/SD/MA/2021(86) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் புதிய கம்பனியின் பணிப்பாளர் சபையாக பிரேரிக்கப்பட்ட அங்கத்தவர்களுக்காக பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. 137 (04) ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தில் குறிப்பிட்ட விடயங்களுக்காக வரையறுத்த ரக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனியின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 2021-10-19 ஆந் திகதிய MOD/SD/2021(254) ஆம் இலக்க பாதகாப்பு அமைச்சு கடிதத்தின் மூலம் இப்புதிய கம்பனியை தோற்றுவிக்கும் தேவைப்பாடு காணப்பட்டதா என்பது தொடர்பான சாத்திய வள ஆய்வினை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தும் பம்பனியின் அப்போதிருந்த தலைவர்/ பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் உள்ளடங்கலாக முகாமைத்துவத்தினால் சாத்தியவள ஆய்வினை

| | | |
|---|---|---|
| | முகாமைத்துவத்தனிால் மேற்கொள்ளமை சம்பந்தமாக தற்போதைய தலைவர்/ பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் உள்ளடங்கலாக முகாமைத்துவத்திற்கு விடயத்தினை காட்டுவதற்கு இயலுமை இல்லை. இப்பிரச்சினையான காலப்பகுதியில் நாட்டில் அதிக அளவில் பசளை பற்றாக்குறை காணப்படுவதுடன் தேசிய தோவைப்பாடாகக் கருதி சேதனப் பசளை தயாரிப்பதற்கு முன்னுரிமை வழங்கியதன் காரணமாக அதனை நிறைவேற்றிக்கொள்வதற்கு 2021-06-21 ஆந் திகதி RPML கம்பனியை தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என எடுத்துக்கொள்ளலாம். | |

**3.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனிக்குச் சொந்தமான 9 mm Pistol வகையான 08 துவக்குகள் மற்றும் SLR வகையான 11 துவக்குகளும் உள்ளடங்கலாக 19 துவக்குகள் சனாதிபதி பரீட்சிப்பு ஆணைக்குழுவினால் பொலிஸ் விசேட செயற்பாட்டுப் படை பயிற்சி பாடசாலைக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் சனாதிபதி பரீட்சிப்பு ஆணைக்குழு இரத்துச் செய்யப்பட்டுள்ளதனால் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு கம்பனிக்கு முடியாதிருந்தது. | அந்த துவக்குகளை கம்பனி மீளப் பெற்றுக்கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் தலையீட்டின் கீழ் தேவையான மேலதிக நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. | துவக்குகளை விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டின் மே மாதம் 20 ஆந் திகதி நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த கம்பனியின் தலைமை அலுவலக கட்டிடத்திற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான கொழும்பு நகரத்தில் அமைந்துள்ள 86.4 பேச்சர்ஸ் காணி தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தினை நிர்மாணிக்கும் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3192.47 மில்லியனாகும். உரிய நிர்மாண வேலைகளுக்காக ஒப்பந்த கம்பனிக்கு ரூபா 681.06 மில்லியன் வேலையை ஆரம்பித்தல் முற்பணத்தை செலுத்தி நிர்மாண வேலைகள் குறிப்பிட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டு 2015 யூலை 03 ஆந் திகதியளவில் நிர்மாண வேலைகள் ஒரு | ஒப்பந்த கம்பனிக்கு வேலை ஆயத்தப்படுத்தல் முற்பணமாக ரூபா 608,089,855 தொகை செலுத்தப்பட்டுள்ளது. எனினும் செய்த வேலைகளின் பெறுமதியாக ரூபா 424,606,569 தொகையினை ஆலோசனைக் கம்பனி அங்கீகரித்துள்ளதுடன் மேற்கொள்ளப்படாத வேலைகளுக்காக மிகையாக ரூபா 183,683,286 தொகை மாகா இன்ஜினியரிங் தனியார் கம்பனி நிறுவனத்திற்கு | செயற்திட்டத்தினை ஆரம்பிக்கும் போது முறையான நடைமுறைக்கு இணங்க அது மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

தலைப்படசமாக நிறுத்தப்பட்டிருந்தது. அதுவரை செய்த வேலைகளின் பெறுமதி ரூபா 424.41 மில்லியனாக ஆலோசனைக் கம்பனியால் கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் தாமதக் கட்டணம் செயற்திட்டத்தை நிறுத்தயதற்காக செலுத்த வேண்டியுள்ள மேலதிகச் செலவுகள், சந்தர்ப்ப கிரய நட்டம் மற்றும் இலாபம் இழக்கப்படுதல முதலியனவாக மொத்தமாக ரூபா 1,012 மில்லியன் தொகைக்காக ஒப்பந்த கம்பனியால் வேண்டிக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்கு ஆலோசனை சேவை கம்பனியின் இணக்கப்பாடு கிடைத்துள்ளது என உறுதிப்படுத்தப்படவில்லை. கம்பனிக்கு நிதி இல்லாமையின் அடிப்படையில் கம்பனியால் மேற்கொண்ட வேண்டுதல்களுக்கு இணங்க முற்பணத்தை கழித்ததன் பின்னர் செலுத்த வேண்டிய மிகுதிப் பணமாகிய ரூபா 330.94 மில்லியன் தொகைக்குப் பதிலாக ரூபா 361.37 மில்லியனைப் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கும் செலுத்தாதிருப்பதற்கும் இரண்டு தரப்பினர்களும் இணங்கி கொண்டிருந்தனர். இதன் போது உரிய ஆலோசனை சேவைக் கம்பனியை தெரிவு செய்து நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பித்து 03 மாதங்களின் பின்னர் உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டிருந்ததுடன் ஆலோசனைகச் செயற்பாடுகள் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. அவ்வாறே கட்டிடத்தை நிர்மாணிக்கும் போது அது தொடர்பாக பல்வேறு அரசாங்க துறைகளிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த விடுவிப்பு அறிக்கைகளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன் நிர்மாண வேலைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் அதற்காக நிதியை வழங்குகின்ற தெளிவான காசுப் பாய்ச்சல் ஒன்று இல்லாது மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க மேற்கூறிய கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக நிர்மாண வேலைகளுக்கான ஆலோசனைக் கம்பனிகளுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 146.71 மில்லியன் தொகை மற்றும் மண் தொழில் நுட்பத்திற்காக (Soil Tech) ரூபா 583,005 தொகையும் உள்ளடங்கலாக இச்செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 828.36 மில்லியன் செலவு விளைவற்ற செலவாகும்.

செலுத்தப்பட்டுள்ளது. முதலாம் கட்டத்தில் ஒப்பந்த கம்பனிக்கு செலுத்தப்பட்டுள்ள பணம் ரூபா 608,089,855 ஆனதுடன் செய்த வேலைகளின் பெறுமதியாக ஆலோசனைக் கம்பனி அங்கீகரித்துள்ள தொகை ரூபா 424,606,569 ஆகும். அதற்கிணங்க மிகையாக செலுத்தியுள்ள பணம் ரூபா 183,683,286 ஆகும். அத்தொகையினை எதிரீடு செய்வதற்கு 2017 பெப்ரவரி 28 ஆந் திகதி கலந்துரையாடலின் போது இணக்கப்பாட்டிற்கு வரப்பட்டடிருந்தது. அதற்கிணங்க இரண்டாம் கட்டிடத்தினை ஆரம்பிக்கும் போது முதலாம் கட்டிடத்திற்காக எத்தொகையும் இன்னும் செலுத்ததுவதற்கு இல்லை என அப்போதைய முன்னாள் தலைவர்/ பிரதானியின் கையொப்பத்துடன் 2020-08-25 ஆந் திகதிய RALL/SEC/LEG/GENERAL/2020(35) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் ஒப்பந்த கம்பனியின் தவைலவருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

## 3.4 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனியின் தலைமை அலுவலகத்தை உள்ளடக்கி 247 பிராந்திய அலுவலகங்களினை நிருவகிப்பதோடு தொடர்புபட்ட ஆளணியினர் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்தக்கொண்ட ஆளணியினர் ஆனதுடன் கம்பனியில் நிரந்தர அடிப்படையில் இருக்க வேண்டிய பதவிகளை அடையாளங்கண்டு அதற்கிணங்க ஆட்களை சேர்த:தக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எங்கள் கம்பனியின் பிரதான வணிக மேட்டு நில செயற்பாட்டு பிரிவில் சேவையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், விசேட திறன் பிரிவில் சுகாதார சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் சமுத்திர பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் முதலிய தொழில் முயற்சிக்கு நேரடியாக சம்பந்தப்பட்ட செயற்படுகின்ற ஊழியர்கள் சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்படுவதுடன் தொழில் முயற்சியின் தன்மைக்கு இணங்க ஒப்பந்த அடிப்படையின் கீழ் சேவையாற்றுகின்றார்கள். அவ்வாறே எங்கள் கம்பனியில் காணப்படுகின்ற தொழில் முயற்சியின் தன்மைக்கு இணங்க நிறுவனத்தில் 3000 இற்கு அண்மித்ததாக இருக்கின்ற அனைத்து ஊழியர்களையும் நிரந்தரமான ஊழியர்களாக்கும் இயலுமை இல்லாததுடன் நிறுவனத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் ஏதாவது விசேட பதவியிணியினர்களை நிரந்தரமாக்குவதற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகரித்த ஆளணியர்களுக்காக கம்பனியில் நிரந்தர அடிப்படையில் இருக்க வேண்டிய பதவிகளை அடையாளங்கண்டு அங்கீகரித்த ஆளணியர்களுக்கு தேவைப்படுகின்ற ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |